தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தென் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு</u>

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், தென் தமிழகத்தின் சில இடங்களில் அடுத்த 2 நாள்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் தெற்கு அந்தமான் அருகே குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு உருவானது. இது தற்போது நகர்ந்து தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் ஆங்காங்கே அடுத்த இரண்டு நாள்களுக்கு மழை பெய்யும். புதுச்சேரி, வட தமிழகத்தில் வறண்ட வானிலையே நிலவும். இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை மேலும் வலுவடைய வாய்ப்பில்லை. சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். அதிகாலையில் பனி மூட்டமாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி பாம்பனில் 20 மி.மீ. மழை பெய்துள்ளது.

## <u>விதைப் பரிசோதனை அலுவலகத்தில் ஆய்வு</u>

காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையத்தில் கோவை விதைச் சான்று இணை இயக்குநர் ஆய்வு செய்தார். காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையம் பஞ்சுப்பேட்டையில் இயங்கி வருகிறது. விவசாயிகளுக்கு விதைகளைப் பரிசோதனை செய்து தருவது, விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதைகளின் தரத்தை ஆய்வு செய்வது உள்ளிட்ட பணிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை மையத்தின் செயல்பாடு குறித்து, கோவை விதைச் சான்று இணை இயக்குநர் பழனிசாமி ஆய்வு செய்தார்.

அப்போது, அங்கு வைக்கப்பட்டிருந்த 1,378 விதை மாதிரிகளை ஆய்வு செய்தார். விதைகளை பதப்படுத்தவும், முளைப்புத் திறனை அதிகரிக்கவும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் பெருமாள் உடன் இருந்தார்.

**சாத்தியார் அணையில் இருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பு**

மதுரை மாவட்டம், பாலமேடு அருகே உள்ள சாத்தையாறு அணையி0ல் இருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. சாத்தையாறு அணையின் நீர்மட்டம் 29 அடி. சிறுமலை மலைப்பகுதியில் பெய்யும் மழைநீர் சாத்தையாறு அணைக்கு வந்துசேரும். சாத்தையாறு அணையில் இருந்து 10 கண்மாய்கள் பாசனம் பெறுகின்றன. மதுரை நகர்ப்பகுதியில் உள்ள செல்லூர், வண்டியூர் கண்மாய்களுக்கும் சாத்தையாறு அணையில் இருந்து தண்ணீர் வருவது வழக்கம். ஆனால் அணையில் போதிய தண்ணீர் இல்லாததாலும், நீர்வரத்துக் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு போன்றவற்றாலும் சாத்தையாறு அணைத் தண்ணீர் இந்த கண்மாய்களுக்கு கிடைக்கவில்லை. நடப்பு ஆண்டில், வடகிழக்கு பருவகாலத்தில் பெய்த மழையால், அணையின் நீர்மட்டம் 21 அடிக்கு மேல் உயர்ந்தது. இதையடுத்து இந்த அணையின் பாசனப் பகுதிகளுக் காக மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் வியாழக்கிழமை தண்ணீரைத் திறந்துவிட்டார். வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை, வாடிப்பட்டி வட்டாட்சியர் குமார் மற்றும் அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சாத்தையாறு அணையில் இருந்து, வினாடிக்கு 20 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படும். இதன் மூலம் 2,350 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>“மெகா' மாட்டுச் சந்தை துவக்கம் : ஒரு ஜோடி காளை ரூ.1.50 லட்சம்</u>

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி காட்டிநாயனப்பள்ளியில் கூடிய மெகா மாட்டுச் சந்தையில், ஒரு ஜோடி காளை மாடுகள் அதிகபட்சமாக, ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் வரை, விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி அருகே காட்டிநாயனப்பள்ளி சுப்பிரமணியர் ஸ்வாமி கோவில் தைப்பூச திருவிழாவையொட்டி ஆண்டு தோறும், 15 நாட்களுக்கு, மெகா மாட்டு சந்தை நடக்கும். இந்தாண்டு, ஆறு நாட்களுக்கு மாற்றப்பட்டது. கடந்த, 3ம் தேதி துவங்கிய மாட்டு சந்தை, வரும், 8ம் தேதி வரை நடக்கிறது. கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்தும் விற்பனைக்கு, விவசாயிகளும், வியாபாரிகளும் மாடுகளை அழைத்து வந்தனர்.குறிப்பாக, ஆந்திர மாநிலம் குப்பம், கர்நாடகா மாநிலம் கே.ஜி.எப்., ஆகிய பகுதியில் இருந்து விற்பனைக்கு அதிகளவில் மாடுகள் கொண்டு வரப்பட்டது. அதேபோல், கிருஷ்ணகிரி, சூளகிரி, தீர்த்தம், பேரிகை, தேன்கனிக்கோட்டை மற்றும் தர்மபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி, கடத்தூர் ஆகிய பகுதிகளில், வியாபாரிகள் நாட்டு மாடுகளை வளர்த்து, காட்டாநாயனப்பள்ளி சந்தைக்கு, அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இது குறித்து, தடத் தாரையை சேர்ந்த மாட்டு வியாபாரி ராமப்பா கூறியதாவது:கடந்த, 23 ஆண்டுகளாக இங்கு வந்து மாட்டு வியாபாரம் செய்கிறோம். கடந்த ஆண்டு நாங்கள் சந்தைக்கு கொண்டு வந்த மாடுகளில், 20 சதவீதம் மாடுகள் விற்பனையாகாமல் நின்றுவிட்டது. இந்த ஆண்டு, ஒரு ஜோடி

காளை மாடுகள், 25 ஆயிரம் ரூபாயில் இருந்து, ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யும் என்ற எதிர்பார்ப்பில் மயிலை, காரி, துவரைபடை ஆகிய நாட்டு ரகங்களை சேர்ந்த காளைகளை விற்பனைக்கு நிறுத்தியுள்ளோம்.பொதுவாக, அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் காளை மாடுகளை, கரும்பு அதிகம் விளையும் மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் செல்வர். மாட்டுச்சந்தை கூடி, இரண்டு நாட்கள் முடிவடைந்த நிலையில், மாடுகள் விற்பனை அதிகளவில் நடந்து வருகிறது.இனி வரும் நாட்களில், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட வியாபாரிகள், அதிகளவில் காளைகளை வாங்க வருவர் என்பதால், விற்பனை மேலும் அதிகரிக்கும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## கோடையை குளிர்விக்க ஆந்திர தர்ப்பூசணி திருவள்ளூர் வருகை

திருவள்ளூர்: கோடையின் வெப்பத்தை தணிக்க, ஆந்திர மாநிலத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட தர்ப்பூசணி பழங்கள், திருவள்ளூரில் குவிந்துள்ளன. கோடை காலம் துவங்க இன்னும் இரு மாதங்களே இருந்தாலும், தற்போது, பகலில் கடும் வெயிலும், இரவிலும், அதிகாலையிலும் கடும் குளிரும் உள்ளது. இப்போதே வெயில் அதிகம் இருந்தாலும், கோடை காலத்தின் அதன் உக்கிரம் அதிகமாகும் என்பதில் ஐயமில்லை. இதனால், கோடை காலத்தில் வெப்பத்தை தணிக்க உதவும் தர்ப்பூசணி பழம், திருவள்ளூரில் தற்போது குவிந்துள்ளன. ஆந்திர மாநிலம், சித்துார் மாவட்டத்தில் இருந்து, தர்ப்பூசணி பழங்கள் வரவழைக்கப்பட்டு, சி.வி.நாயுடு சாலையில் விற்பனைக்காக குவிக்கப்பட்டு உள்ளன. இதுகுறித்து, தர்ப்பூசணி வியாபாரிகள் கூறுகையில், 'ஆந்திர மாநிலம், சித்துார் மாவட்டம், திருப்பதி, புத்துார் போன்ற பகுதிகளில் தர்ப்பூசணி விளைந்து, அறுவடைக்கு தயாராகி விட்டது. அதை, லாரிகளில் நாங்கள் வரவழைத்துள்ளோம். ஒரு பழத்தின் விலை குறைந்தபட்சம், 50 - 150 ரூபாய் வரை உள்ளது. குறைவான

அளவில் பழங்கள் கிடைப்பதாலும், சரக்கு லாரிகளின் வாடகை அதிகமாக இருப்பதாலும், இந்த விலைக்கு விற்பனை செய்தால் தான் எங்களுக்கு லாபம் கிடைக்கும். பழங்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில், விலையும் குறைய வாய்ப்பு உள்ளது," என்றனர்.

## <u>நெற்பயிர்களில் குலைநோய் கட்டுப்படுத்த வழிமுறைகள்</u>

பெரியகுளம் : சீதோஷ்ணநிலை மாற்றத்தால் நெல்ரகங் களில் குலைநோய் அறி குறிகள் உள்ளது. இதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயத்துறை தெரிவித்துள்ளது. பெரியகுளம் கீழவடகரை, தாமரைக்குளம், வடுகபட்டி, அ.வாடிப்பட்டி, கெங்குவார்பட்டி, குள்ளப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் நெல்ரகங்களான ஆடுதுறை 39, ஆடுதுறை 45, நெல்லூர் ரகம், ஜே.சி.எல் ஆகிய ரகங்கள் ஆயிரத்து 500 எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் பூக்கும் பருவம், பால்பிடிக்கும் பருவ நிலைகளில் உள்ளது. தற் சமயம் நிலவும் ஈரப்பதமான சீதோஷ்ண நிலை காரணமாக குலைநோய் மற்றும் புகையான் தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. இலைகளில் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல்நிற மையபகுதி யுடன் காய்ந்து கண் வடிவ புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய திட்டுக்களை உருவாகும். தீவிர தாக்குதலின் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்றம் அளிக்கும். கதிர் வெளிவந்தவுடன் பயிர்கள் சாய்ந்து விடும். கழுத்து பகுதியில் சாம்பல்நிறம் முதல் பழுப்பு நிற புள்ளிகள் தோன்றி கருப்பு நிறமாக மாறி கதிர் மணிகள் சுருங்கியும், கதிர்கள் உடைந்து தொங்கி கொண்டிருக்கும். வயலில் நோய் தோன்றும்போது செடிகளுக்கு எக்டருக்கு எடிபென்பாஸ் 500 மி.லி., அல்லது மேன்கோசெப் 1 கிலோ அல்லது கிட்டாசின் 250 கிராம் அல்லது டிரைசைக்கேளாசோல் 400 கிராம் தெளிப் பதன் மூலம் கட்டுப் படுத்தலாம். நடவு செய்த 45 நாட் களுக்குப்பின் 10 நாட்கள் இடைவெளியில் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் பொடியை 0.5 சதவீதம் அளவில் மூன்று முறை தெளிக்க

வேண்டும், என வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

## <u>மா மர குத்தகை ஏலம்</u>

ஆண்டிபட்டி : வைகை அணை வலது கரைப்பகுதியில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான மாமரங் களில் காய் பறிப்புக்கான ஏலம் நேற்று நடந்தது. வலது கரைப்பகுதியில் 136 மாமரங்கள் உள்ளன. அல்போன்சா, செந்தூரம், பங்கனப்பள்ளி, கல்லா வகை மாமரங்களின் மகசூலுக்கான ஏலம் ஒவ்வொரு ஆண்டும் விடப் படும். இந்த ஆண்டுக்கான ஏலம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் முன்னிலையில் நேற்று நடந்தது. குறைந்தபட்ச கேட்புத்தொகை ரூபாய் 2 லட்சத்து 51 ஆயிரமாக நிர்ணயம் செய்யப்பட்டது. பெரியகுளத்தைச்சேர்ந்த செல்லத்துரை என்பவர் ஓராண்டுக்கான மகசூலை ரூபாய் இரண்டு லட்சத்து 57 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்துள் ளார். கடந்த ஆண்டு ரூபாய் இரண்டு லட்சத்து 25 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

## <u>கோழிப் பண்ணைகளைமாவட்ட கலெக்டர் ஆய்வு</u>

அரியலூர்: திருமானூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கோழிப் பண்ணைகளை, அரியலூர் மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்தார். அரியலூர் மாவட்டத்தில் உள்ள கிராம பகுதியில், அரசு மானியத்துடன், 5,000 ஆயிரம் கறிக்கோழிகளை கொண்ட, 50 கோழிப் பண்ணைகளை அமைக்க, மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கோழி அபிவிருத்தி திட்டத்தின்கீழ், திருமானூர் வட்டாரத்துக்குட்பட்ட, கரைவெட்டி பரதூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி அசோக்குமார், அரியலூர் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வழங்கிய, 8.25 லட்ச ரூபாய் நிதிஉதவியுடன், தனக்கு சொந்தமான வயலில், அமைத்துள்ள கறிக்கோழிப் பண்ணையை, மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் நேற்று பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். 5,000 கறிக்கோழி

களை வளர்த்து உருவாக்கும் திட்டத்தின்கீழ், துவக்கப் பட்டுள்ள இக்கோழிப் பண்ணை மேம்பாட்டுக்கு, மாநில அரசு முன் மானியமாக, 2 லட்சத்து, 6,250 ரூபாயும், நபார்டு பின் மானியமாக, 2 லட்சத்து, 6,250 ரூபாயும் வழங்கப்படுகிறது.தொடர்ந்து, வெங்கனூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி அண்ணாமலை, வெங்கனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வழங்கிய, 8.25 லட்சம் நிதி உதவி மற்றும் அரசு மானியத்துடன், செயல்படுத்தியுள்ள கறிக்கோழிப் பண்ணையையும், அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப விநாயகமூர்த்தி, மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் டாக்டர் செல்வபெருமாள், உதவி இயக்குநர் டாக்டர் பாஸ்கரன், கால்நடை டாக்டர்கள் கார்த்திகேயன், மணிகண்டன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மதியழகன், உதவி அலுவலர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>முட்டை விலை அதிகரிப்பு</u>**



நாமக்கல்: நாமக்கல்லில் முட்டை விலை 5 காசு உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் பண்ணைகொள்முதல் விலையில் 5 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, ஒரு முட்டையின் விலை 265 காசில் இருந்து 270 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலைக்கேற்ப விலை உயர்த்தப்பட்டுள்ளதாக

பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோமுட்டைக்கோழி ரூ.45, ஒரு கிலோ கறிக்கோழி ரூ. 68 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்) வருமாறு: சென்னை 300, பெங்களூரு, மைசூரு 290, ஐதராபாத் 275, மும்பை 313, விஜயவாடா270, கொல்கத்தா 300, பர்வாலா 265, டெல்லி 285 காசுகள்.

**<u>கோவை ஏல மையத்தில் தேயிலை விலை உயர்வு</u>**



கோவை: கோவை தேயிலை ஏல மையத்தில் இந்த வாரம் ரூ.3.02 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையானது. இது கடந்த வாரத்தை விட ரூ.44 லட்சம் அதிகம். கோவை தேயிலை ஏல மையத்தில் நேற்று முன்தினம் நடந்த விற்பனையில் தேயிலைத்தூள் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 3.28 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.52 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ரூ.83.41க்கு ஏலம் போனது. மொத்தம் ரூ.2.10 கோடிக்கு விற்றது. ஏற்றுமதி ரகம்(லீப்) 1.31 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்ததில் 1.17 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரியாக ஒரு கிலோ ரூ.78.14 விற்பனையானது. மொத்தம் மதிப்பு ரூ.92 லட்சமாகும். கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.1.24ம், ஏற்றுமதி ரகம் 22 பைசாவும் அதிகரித்துள் ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.3.02 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரம் விற்றதை விட ரூ.44 லட்சம் அதிகமா கும். கடந்த 3 வாரங்களுக்கு பிறகு தேயிலை விற்பனை அளவு மற்றும் விற்பனை மதிப்பு அதிகரித்துள்ளது.

## திருமலை அகரத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

திட்டக்குடி, : திருமலைஅகரம், கோனூர், நந்திமங்கலம், அரியராவி, பூவனூர், கொல்லத்தங்குறிச்சி ஆகிய பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதையடுத்து திருமலைஅகரத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபம் கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க ஆட்சியர் உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து திருமலைஅகரத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு விழா நடைபெற்றது. பெண்ணாடம் பேரூராட்சி கவுன்சிலர் வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். மண்டல மேலாளர் யேசுமேரி, உதவி மேலாளர் பழனிச்சாமி, பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் ராம்குமார், வருவாய் ஆய்வாளர் ஆனந்த், கிராம நிர்வாக அலுவலர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எழுத்தர் ஜெயக்குமார் வரவேற்றார். பேரூராட்சி மன்ற தலைவர் மதியழகன் கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்தார். தொடக்க வேளாண்மை சங்க இயக்குனர் மாசிலாமணி, பண்டக சாலை இயக்குனர் ரவி ஆகியோர் பேசினர். அண்ணா தொழிற்சங்க மாவட்ட துணை தலைவர் மதிகோபி, முன்னாள் கவுன்சிலர் மாரிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர். கவுன்சிலர் கஸ்தூரிபாய்காந்தி நன்றி கூறினார்.

## நாட்டுக்கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்

நாமக்கல், : மாவட்டத்தில், கோடைக்காலத் தில் வெள்ளைக்கழிச்சல் நோய் தாக்கத்திலிருந்து நாட்டுக்கோழி களை பாது காக்க, கோழிக் கழிச்சல் நோய்த் தடுப்பூசிப்போட இரு வார முகாம் ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளது. இம்முகாம் வரும் 9ம் தேதி முதல் 22ம் தேதி வரை இரு வாரங்களுக்கு, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 2 லட்சம் நாட்டுக்கோழி களுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி போடப்படுகிறது. மாவட்டத்திலுள்ள

அனை த்து கிராமங்களிலும். கால் நடை உதவி மருத்துவர்கள், கால் நடை ஆய்வாளர்கள் மூல மாக தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப் படுகிறது. எனவே, நாட்டுக்கோழி வளர்க்கும் அனைத்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திகொள்ள வேண்டும். இத்தகவலை நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளை கழிச்சல் நோயை தடுக்க தடுப்பூசி முகாம் 9ம் தேதி நடக்கிறது

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளுக்கு கோடை காலத்தில் ஏற்படும் வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு தடுப்பூசி முகாம் அனைத்து கிராமங்களிலும் வரும் 9ம் தேதி முதல் 22ம் தேதி நடக்கிறது. இது குறித்து தர்மபுரி கலெக்டர் விவேகானந்தன் விடுத்துள்ள அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் கிராமப்புறங்களில் வளர்க்கப்படும் நாட்டு கோழிகளுக்கும், இதர கோழிகளுக்கும் கோடைக்கால ங்களில் வெள்ளைக்கழிச்சல் நோய் ஏற்படுகிறது. இந்நோயை கட்டுப்படுத்த கால்நடை மருத்துவமனைகள் மூலம், வாரத்திற்கு ஒரு முறை தடுப்பூசி போடப்படுகிறது. இருப்பினும் கோடை காலத்தில் ஏற்படும் வெள்ளை கழிச்சலை தடுக்க, இலவச தடுப்பூசி முகாம்கள் அனைத்து கிராமத்திலும் வரும் 9ம் தேதி முதல் வரும் 22ம் தேதி வரை கால்நடை பராமரிப்பு துறை சார்பில் நடத்தப்பட உள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது கோழிகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## மாவட்டத்தில் 4800 கால்நடைக்கு மானியத்துடன் கூடிய காப்பீடு

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் மார்ச்சிற்குள் 4800 கால்நடைகளுக்கு மானியத்துடன் கூடிய காப்பீடு திட்டம் அமல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டர் பிரபாகர் வெளியிட்டுள்ள அறிக்கை

யில் தெரிவித்திருப்பதாவது: கால்நடை வளர்க்கும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசின் மானியத்துடன் கூடிய கால்நடை காப்பீட்டு திட்டம் ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கலப்பின பசுக்கள், நாட்டு பசுவினங்கள் மற்றும் எருமைகளை இத்திட்டத்தில் காப்பீடு செய்வதன் மூலம் எதிர்பாராமல் ஏற்படும் கால்நடை இழப்பினை ஈடு செய்ய முடியும். ஒரு விவசாயி அதிகபட்சமாக ஐந்து கறவை பசுக்கள் அல்லது எருமைகளை மானியத்துடன் ஒரு வருடம் அல்லது மூன்று வருடங்களுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு காப்பீடு பிரிமிய தொகையில் 70 சதவீதம் அரசு மானியமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீதம் அரசு மானியமாகவும் வழங்கப்படும். ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் 4800 கால்நடைகளுக்கு மார்ச் மாதத்திற்குள் காப்பீடு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.எனவே, பசு மற்றும் எருமை வளர்க்கும் விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம். இதுதொடர்பாக அருகாமையில் உள்ள கால்நடை நிலையங்களில் கால்நடை மருத்துவர்களை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு கலெக்டர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## <u>நம்பியூர் வட்டாரத்தில் உர செலவை குறைக்க அசோலா உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம்</u>

கோபி, : கோபி அருகே நம்பியூரில் உர செலவை குறைக்க அசோலாவை உற்பத்தி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நம்பியூர் வட்டாரத்தில் குருமந்தூர், ஊஞ்சப்பாளையம் ஆகிய பகுதிகளில் புரதசத்தும், தழைச்சத்தும் மிகுந்த அசோலா உயிர் உரத்தை உற்பத்தி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நம்பியூர் வட்டார வேளாண்மை திட்ட பணிகளையும், அசோலா உயிர் உர உற்பத்தியையும் ஆய்வு செய்த ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை

இயக்குநர் செல்வராஜ் செய்தியாளர்களிடம் கூறுகையில், அசோலா என்பது பெரணி வகையை சார்ந்த நீர்த்தாவரமாகும். இந்த தாவரத்தில் உள்ள அனபினா என்ற நீலப்பச்சைப் பாசி நுண்ணுயிர் காற்றில் உள்ள தழைச்சத்தை நிலைப்படுத்தி கொடுக்கிறது. இதனால் அசோலா பசுமையாக வளர்கிறது. இதை நெல் வயலுக்கு போட்டு அப்படியே பசுந்தழை போல சேற்றில் மிதித்து விடலாம். இதனால் ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து பயிருக்கு கிடைக்கிறது. ஒரு ஏக்கர் நெல் வயலில் அசோலா வளரும் போது, 6 டன்கள் பசுந்தழை உரம் கிடைக்கிறது. மேலும் இதில் 5 சதவீதம் தழைத்சத்து, 0.5 சதவீதம் மணிச்சத்து, 4 சதவீதம் சாம்பல் சத்து ஆகியவை உள்ளன. இந்த அசோலாவை கறவை மாடுகளும், கோழிகளும் விரும்பி உண்பதால், அடர் தீவனத்துக்கு ஆகும் செலவும் குறைவதுடன், பாலுக்கும் நல்ல விலை கிடைக்கிறது என்றார். இந்த ஆய்வின் போது நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி, வேளாண்மை துணை இயக்குநர் கார்த்திகேயன், வேளாண்மை அலுவலர் பிரியா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மோகன சுந்தரம் ஆகியோர் உடனிருந்தனர். செயல் விளக்க ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மணிகண்டன், அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்</u>

கோவை, : கோழிகளுக்கு ஏற்படும் கோழிக்கழிச்சல் நோய் கோழிகளில் அதிக இறப்பை ஏற்படுத்தும் நோய்களில் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. இந்த நோயில் இருந்து கோழிகளை பாதுகாக்க கால்நடை நிலையங்கள் மற்றும் கிளைநிலையங்களில் வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களின் போதும் நோய்கான தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இவைதவிர ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் கோழிக்கழிச்சல் நோய்க்கான தடுப்பூசி மாநிலம் முழுவதும் இரண்டு வாரகால முகாமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டு இந்நோய்க்கு எதிராக 256.57

லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்நிலையில், இந்த ஆண்டிற்கான தடுப்பூசி முகாம் வரும் 9ம் தேதி முதல் நடக்கவுள்ளது. கோவை மாவட்டத்தில் வரும் 9ம் தேதி முதல் 22ம் தேதி வரை தடுப்பூசிகள் போடப்படவுள்ளது. இதற்கு ராணி பேட்டை கால்நடை நோய் தடுப்பு நிலையத்தில் இருந்து 75 ஆயிரம் டோஸ் மருந்துகள் கோவைக்கு வந்துள்ளது. இவை கால்நடை மருத்துவமனைகள், 24 ஊரக கால்நடை மருந்தகங்கள், 12 பெரு மருத்துவமனைகள் மற்றும் 22 கிளைகள், ஒரு பன்முக கால்நடை மருத்துவமனைகள் மூலமாகவும் போடப்படவுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் கோழிகளுக்கு இந்த தடுப்பூசிகள் போடப்படவுள்ளதாக கோவை மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் பெருமாள்சாமி தெரிவித்துள்ளார்.

**தோகைமலை மல்லிகைக்கு திருச்சி மார்க்கெட்டில் கிராக்கி பராமரிப்பு பணி தீவிரம்**

தோகைமலை, : திருச்சி மார்க்கெட்டில் தோகைமலை மல்லிகைக்கு தனி கிராக்கி உண்டு என்பதால் அவற்றை பராமரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். கரூர் மாவட்டம் தோகைமலை பகுதியில் உற்பத்தியாகும் மல்லிகை பூக்களுக்கு திருச்சி பூ மார்கெட்டில் தனி சிறப்பு உண்டு. தோகைமலை ஒன்றியத்தில் நெய்தலூர், சேப்ளாப்பட்டி, முதலைபட்டி, ஆர்சம்பட்டி, தளிஞ்சி, ஆலத்தூர், தோகைமலை மற்றும் சூரியனூர், நங்கவரம், நச்சலூர் உட்பட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் மல்லிகை பூக்கள் சாகுபடி செய்து வருகின்றனர். தோகைமலை பகுதியில் பருவமழை சரியாக பெய்யாத நிலையில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால் விவசாய நிலங்களில் பல்வேறு பயிர்களுக்கு தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் சாகுபடி செய்வதை வெகுவாக குறைத்து விட்டனர். வாரத்திற்கு ஒருமுறை தண்ணீர் விட்டாலே போதும், மாசிமாதம் முதல் கார்த்திகை மாதம் வரை என 10 மாதங்களுக்கு மல்லிகை பூ நல்ல மகசூல் கிடைக்கும். இதனால்தான் மல்லிகைப்பூ பயிரிட விவசாயிகள் ஆர்வம்

காட்டிவருகின்றனர். மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.100க்கு சாதாரண நாட்களிலும், முகூர்த்தம், கோயில்திருவிழா போன்ற விசேஷ காலங்களில் ரூ.1500 வரை விற்பனையாகிறது. எனவே விவசாயிகள் மல்லிகை செடிகளை நல்ல முறையில் பராமரித்து வருகின்றனர். மார்கழி மாதம் முதல் தை மாதம் வரை பனி பெய்வதால் மல்லிகை பூ மகசூல் வெகுவாக குறைந்துவிடும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். இந்த இரு மாதங்களில் மார்கழி மாத தொடக்கத்தில் மல்லிகை செடிகளின் மேல்பகுதியில் முதிர்ச்சியடைந்த தலைகளை வெட்டி அச்செடிகளை கட்டி வைக்கப்படும். இதை மீண்டும் தைமாத இறுதியில் கட்டுகளை அவிழ்த்து விட்டு உரம் வைத்து விடுவார்கள். மல்லிகை செடி மீண்டும் வருகிற மாசி மாத தொடக்கத்தில் பூக்கத் தொடங்கிவிடும். இந்நிலையில் இடைப்பட்ட நாட்களில் மல்லிகை போன்று நிறமுள்ள மணமில்லாத காக்கரட்டான் பூக்கள் விற்பனையாகி வருகிறது. மார்ச் மாதம் முதல் மல்லிகை மகசூல் தொடங்கி விடும் என்பதால் தோகைமலை பகுதி விவசாயிகள் தற்போது மல்லிகை செடிகளை நன்கு பராமரித்து வருகின்றனர்.

## <u>அரியலூரில் 11ம் தேதி பருத்தி ஏலம் துவக்கம்</u>

அரியலூர், : அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டு அறிக்கை: அரியலூர் மாவட்ட விவசாயிகள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் வரும் 11ம் தேதி (புதன்கிழமை) அரியலூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் மறைமுக ஏல முறையில் பருத்தி விற்பனைப் பரிவர்த்தனை துவங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதி வாரம் புதன் கிழமை தோறும் இக்கூடத்தில் மறைமுக ஏலம் முறையில் பருத்தி வணிகத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் கலந்து கொள்ளலாம். மேலும் அறுவடை செய்யப்பட்ட பஞ்சுகள் தூசி இன்றி தூய்மையாகவும், வெண்மையாக இருக்க வேண்டும், நிழலில் உலர்த்தி விற்பனைக்கு கொண்டு வர வேண்டும், ஈரப்பதம் 8% சதவிதித்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்

என்பதை விவசாயிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் பருத்தி பஞ்சு நல்ல விலைக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## <u>அரியலூர் மாவட்டத்தில் 50 கோழிப்பண்ணைகள் அமைக்க இலக்குகலெக்டர் தகவல்</u>

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் 50 கோழி பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் தெரிவித்தார். அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தில் கால்நடைகள் பராமரிப்பு துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் ஆய்வு மேற்கொண்டார். திருமானுரை அடுத்த கரைவெட்டி பகுதி யில் கங்காதுரை என்பவரி ன் விவசாய நிலத்தில் 5 ஆயிரம் சதுர அடி பரப்பள வில் கோழிப்பண்ணை அமைக்கப்பட்டு கோழிக்குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருவதை அவர் பார்வையிட்டார். பின்னர் கலெக்டர் பேசியதாவது: கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், கோழிப்பண்ணைகள் அமைப்பதற்காக மாவட்டத்தில், 50 பண்ணைகள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 33 பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளது. மேலும் 10 கோழிப்பண்ணைகளில் கோழிக்குஞ்சுகள் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக கரைவெட்டி பரதூர், வெங்கனூர் ஆகிய விவசாயி கள் நிலத்தில் கோழிப்பண்ணைகள் அமைக்கப்பட்டு கோழிக் குஞ்சுகள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு வருகிறது. கோழிப் பண்ணை அமைக்க மொத்த மதிப்பீடு ரூ. 8 லட்சத்து 25 ஆயிரம் ஆகும். இதில் வங்கிக் கடனுதவி ரூ. 6 லட்சத்து 75 ஆயிரத்து 500 ஆகும். தமிழக அரசு மானியம் ரூ. 2 லட்சத்து 6 ஆயிரத்து 250ம், நபார்டு மானியம் ரூ. 2 லட்சத்து 6 ஆயிரத்து 250 வழங்கப்படுகிறது. மேலும் விவசாயம் சார்ந்த வணிக தொழிலாக கோழிப்பண்ணைகளையும், அதன் அருகில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் வாழை, காய்கறிகள் அரசின் மானிய உதவியு டன்

இளைஞர்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது பாராட்டுக்குரியது என்றார். இநிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குபீர் சடையப்ப விநாயகமூர்த்தி, கால்நடைப் பராமரிப்புத்துறை மணடல இணை இயக்குனர் செல்வபெருமாள், உதவி இயக்குனர் பாஸ்கரன், உதவி டா க்டர்கள் கார்த்திக்கேயன், மணிகண்டன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மதியழகன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சரவணன் உள்ளிட் பலர் கலந்து கொண்டனர்.

## 25% கூடுதல் மகசூல் பெற உளுந்து பயிரில் டிஏபி கரைசல் வேளாண் அதிகாரி வேண்டுகோள்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள உளுந்து பயிரில் 25 சதவீதம் கூடுதல் மகசூல் பெற டிஏபி கரைசல் தெளிக்க வேண்டுமென விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சேதுபாவா சத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிரில் 25 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற 2 சத டிஏபி கரைசல் தெளிப்பது அவசியமாகும். ஒரு ஏக்கருக்கு தேவையான 4 கிலோ டிஏபி உரத்தை நன்கு தூள் செய்து 10 லிட்டர் தண்ணீரில் முதல்நாளே ஊறவைத்து நன்கு கலக்கிவிட வேண்டும். மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் வடிகட்டி எடுத்து கொண்டு அத்துடன் 190 லிட்டர் தண்ணீர் சேர்த்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். 35வது நாள் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 45வது நாள் காய் பிடிக்கும் தருணத்தில் ஒரு முறையும் கரைசல் தயாரித்து 2 முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் மண்ணிலிருந்து நேரடியாக மணிச்சத்தை எடுத்து கொள்ள முடியாத பயிர்கள் டிஏபி கரைசல் மூலமாக இலைவழியாக மணிசத்து அளிக்கும்போது பயிர்கள் உடனடியாக மணிச்சத்தை பெறுவதுடன் உருவாகும் பூக்களை எல்லாம் பிஞ்சுகளாக

மாறி காய்களாக உருவாகி அதில் உள்ள விதைகள் எல்லாம் நல்ல திரட்சியான எடையுடன் கூடிய தரமான மணிகளாக கிடைக்கிறது. இதனால் வழக்கத்துக்கு மாறாக ஒரு ஏக்கரில் 25 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எனவே உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் டிஏபி கரைசல் தெளித்து பயன்பெறலாம்.

**<u>வேளாண்துறை ஆலோசனை உளுந்து சாகுபடியில் தொழில் நுட்பங்கள்</u>**

பழநி, : உளுந்து சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறையி னர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி வட்டார விவசாயிகள் நல்ல வடிகால் வசதியுள்ள அனைத்து நிலங்களி லும் உளுந்து சாகுபடி செய்யலாம். செப்டம்பர்-அக்டோபர் காலங்களில் வம்பன் 2,3,4 மற்றும் ஏ.பி.கே.1 ஆகிய ரகங்களை பயிரிடலாம். ஜனவரி- பிப்ரவரி மாதங்களில் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். பிப்ரவரி-மார்ச் மாதங்களில் வம்பன் 4 மற்றும் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். எக்டேருக்கு 20 கிலோ விதையை 30*10 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைகளை துத்தநாக சல் பேட் 100 பிபி.எம் கரைசலில் 1 கிலோ விதைக்கு 1 லிட்டர் கரைசல் என்ற அளவில் 3 மணி நேரம் ஊர வைத்து விதைக்க வேண்டும். மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிட வேண்டும். பொது பரிந்துரையின்படி இறவை சாகுபடியாளர்கள் எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்துக்கள் இட வேண்டும். மானாவாரி விவசாயிகள் எக்டேருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்துக்கள் இட வேண்டும். மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். விதைக்கும் முன் கடைசி உழவில் பயறு நுண் ணுரம் எக்டேருக்கு 5 கிலோ இட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45வது நாட்களில் 2% டி.ஏ.பி கரை சல் இட வேண்டும். பூக்கள் தோன்றும் ஒருமுறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும், என்.ஏ.ஏ 40 பிபிஎம்

கரைசலை தெளிக்க வேண் டும். இரவையில் எக்டேருக்கு 500 மில்லி புளுகுளோரலின் களைக்கொல்லியை 625 லிட்டர் நீரில் கலந்து விதை த்த 3ம் நாள் தெளித்து உடனடியாக நீர் பாய்ச்ச வேண் டும். பின், 25வது நாள் கைக் களை எடுக்க வேண்டும். மானா வாரி நிலங்களில் 20 மற்றும் 40வது நாளில் கைக் களை எடுக்க வேண் டும். குறிப்பாக பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் வறட்சியை தவிர்க்க வேண் டும் என பழநி வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உளுந்து பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம் கலெக்டர் மதிவாணன் தகவல்**



திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள உளுந்து பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம் என மாவட்ட கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பயிர்காப்பீடு

திருவாரூர் மாவட்டதில் நடப்பாண்டில் நெல் தரிசில் சாகுபடி செய்துள்ள உளுந்து மற்றும் பச்சைபயிரினை தேசிய வேளாண்மை காப்பீடு திட்டத்தின் கீழ், பயிர் காப்பீடு செய்யலாம். இதில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு மார்ச் 31-ந் தேதியும், கடன் பெறாத விவசாயிகளுக்கு வருகிற 15-ந் தேதியும் கடைசி நாளாகும். உளுந்து பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.5ஆயிரத்து 427-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரீமியத்

தொகையாக ரூ.109-யை செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.5ஆயிரத்து 427-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரீமியத் தொகையாக ரூ.54 செலுத்த வேண்டும். கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.5ஆயிரத்து 427க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரீமியத் தொகையாக ரூ.49-யை செலுத்த வேண்டும். கூடுதலாக ஏக்கருக்கு ரூ.8140-க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் விவசாயிகள் கூடுதல் பிரீமியமாக ரூ.977-யை தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம்.

பச்சைப்பயறு

பச்சைப்பயறு பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரத்து 853-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரீமியத் தொகையாக ரூ.97-யை செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.4ஆயிரத்து 853-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரீமியத் தொகையாக ரூ.49-யை செலுத்த வேண்டும். கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.4ஆயிரத்து 853-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரீமியத் தொகையாக ரூ.44-யை செலுத்த வேண்டும். கூடுதலாக ஏக்கருக்கு ரூ.7ஆயிரத்து280-க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் விவசாயிகள் கூடுதல் பிரீமியமாக ரூ.1 ஆயிரத்து 9-யை தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்திடலாம். கிராம நிர்வாக அலுவலர் சான்று பயிர்கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று முன்மொழிவு படிவத்துடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ அல்லது சேவைப் பகுதி வணிக வங்கிகளிலோ தங்களின் பிரிமியத் தொகையை செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது வணிக வங்கிகளிலோ பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.